# துல்-ஹிஜ்ஜாவின் முதல் பத்து நாட்களின் சிறப்புக்கள், சட்டதிட்டங்கள், மற்றும் நல்-அமல்கள்

விளக்கவுரை:
அஷ்ஷெய்ஹ் அபூ அப்திர்-ரஹ்மான் நவ்வாஸ் அல்-ஹிந்தி அஸ்-ஸெய்லானி (ஹபிழஹுல்லாஹ்)

தொகுப்பு:
அபூ ஜுலைபீப் ஸாஜித் இப்னு (சுப்யான்) நஸ்ருதீன் அஸ்-ஸெய்லானி

SALAFI CALL
The islamic audios

بسم اللــــه الرحمـــــــن الرحيم

الحمد لله نحمده ونستعينه ونستغفره ونعوذ بالله من شرور أنفسنا ومن سيئات أعمالنا، من يهده الله فلا مضل له ومن يضلل فلا هادي له، وأشهد أن لا إله إلا الله وحده لا شريك له وأشهد أن محمدا عبده ورسوله.

அன்புமிக்க சகோதரர்களே!

அல்லாஹ் தபாரக வ தஆலா தன்னுடைய மேலான பேச்சான திருக்குர்ஆனில் கூறுகிறான்:

﴿وَرَبُّكَ يَخْلُقُ مَا يَشَآءُ وَيَخْتَارُ﴾

மேலும் உமதிரட்சகன் தான் நாடியவற்றைப் படைக்கிறான், தான் விரும்பியவற்றை தேர்ந்தெடுக்கின்றான். (சூரா அல் கஸஸ்: 68)

அல்லாஹ் ஸுபஹானஹு வ தஆலா தான் நாடியதை படைக்கக் கூடியவனாக இருக்கின்றான். அதேபோல் தான் நாடியதை மேன்மைப்படுத்தி தேர்ந்தெடுக்கக் கூடியவனாகவும் இருக்கின்றான்.

அல்லாஹ் தேர்ந்தெடுத்த மேன்மைபடுத்திய ஒரு படைப்பு தான் இந்த மனித படைப்பாகும்.

அல்லாஹ் தபாரக வ தஆலா கூறுகிறான்:

﴿وَلَقَدْ كَرَّمْنَا بَنِىْٓ اٰدَمَ وَحَمَلْنٰهُمْ فِى الْبَرِّ وَالْبَحْرِ وَرَزَقْنٰهُمْ مِّنَ الطَّيِّبٰتِ وَفَضَّلْنٰهُمْ عَلٰى كَثِيْرٍ مِّمَّنْ خَلَقْنَا تَفْضِيْلًا﴾

மேலும், ஆதமுடைய மக்களைத் திட்டமாக நாம் கண்ணியப்படுத்தினோம், கரையிலும், கடலிலும் நாம் அவர்களை சுமந்து சென்றோம், நல்லவற்றிலிருந்து அவர்களுக்கு நாமே உணவளித்தோம்,

நாம் படைத்தவற்றில் அனேகவற்றை விட (தகுதியில்) நாம் அவர்களை மிகமிக மேன்மையாக்கியும் வைத்திருக்கின்றோம். (சூரா அல் இஸ்ரா: 70)

அதேபோல் அல்லாஹ் தபாரக வ தஆலா ரஸூல் மார்களையும் தேர்ந்தெடுத்து அவர்களை மேன்மை படுத்தினான்.

அல்லாஹ் சுப்ஹானஹூ வ தஆலா கூறுகிறான்:

﴿وَلَقَدْ فَضَّلْنَا بَعْضَ النَّبِيِّنَ عَلَىٰ بَعْضٍ﴾

நபிமார்களில் சிலரை, வேறு சிலரை விடவும் நிச்சயமாக நாம் மேன்மையாக்கி வைத்தோம் (சூரா அல் இஸ்ரா: 55)

மேலும் கூறுகிறான்:

﴿تِلْكَ الرُّسُلُ فَضَّلْنَا بَعْضَهُمْ عَلَىٰ بَعْضٍ﴾

அத்தூதுவர்கள் அவர்களில் சிலரைச் சிலரைவிட நாம் மேன்மையாக்கியிருக்கின்றோம் (சூரா அல் பகரா: 253)

மேலான இந்த (தீனை) மார்க்கத்தை எத்தி வைப்பதற்காக எவ்வாறு அல்லாஹ் தபாரக வ தஆலா மனிதர்களிலிருந்து ரஸூல்மார்களை தேர்ந்தெடுத்தானோ அதேபோல் அந்த நபிமார்களுக்கு மத்தியிலும், ரஸூல்மார்களுக்கு மத்தியிலும் சிலரை விட சிலரை மேன்மைப்படுத்தி வைத்துள்ளான்.

எனவே அல்லாஹ் தபாரக வ தஆலா தான் நாடியவைகளை படைக்கின்றான்; தான் நாடியவைகளை தேர்ந்து எடுக்கிறான்; தான் நாடியவைகளை மற்ற படைப்பினங்களை விட மேன்மை படுத்தி வைக்கின்றான்.

அந்த வகையில் அல்லாஹ் தபாரக வ தஆலா படைத்த இந்த உலக வாழ்க்கையின் வருடங்களில், மாதங்களில், நாட்களில், மணித்தியாலங்களில் சிலவற்றை அவன் தேர்ந்தெடுக்கிறான்.

அஷ்ஹுர் அல் ஹுரும் (ٱلْأَشْهُرُ ٱلْحُرُمُ) என்ற ரஜப், துல் கஅதா, துல்ஹஜ், முஹர்ரம் ஆகிய அந்த நான்கு மாதங்களை அல்லாஹ் சுப்ஹானஹூ வ தஆலா தேர்ந்தெடுத்துள்ளான். அந்த மாதங்களை மேன்மைப்படுத்தி அதில் சில விஷயங்களை அவன் தடுத்துள்ளான்.

அதேபோல் ரமலான் மாதத்தையும் பரக்கத் செய்யப்பட்ட மேலான ஒரு மாதமாக மேன்மைப்படுத்தி உள்ளான்.

அதேபோன்று நாட்களிலும் பல்வேறு நாட்களை அல்லாஹ் சுப்ஹானஹூ வ தஆலா தேர்ந்தெடுத்து மேன்மைப்படுத்தி உள்ளான். அவைகளில் ஒன்று ஜும்ஆ தினமாகும். ஒவ்வொரு கிழமைகளிலும் மிகச்சிறந்த தினம் ஜும்ஆ தினம் வேறு எந்த தினத்திற்கும் இந்த சிறப்பு கிடையாது என்பது இந்த உம்மத்தினுடைய இஜ்மாவாக (ஒருமித்த கருத்தாக) இருக்கிறது.

## துல் ஹிஜ்ஜாவின் முதல் பத்து நாட்களின் முக்கியத்துவமும் அதன் சிறப்பும்

அதேபோல் ஒவ்வொரு வருடத்திலும் வேறு சில நாட்களையும் அல்லாஹ் சுப்ஹானஹூ வ தஆலா தேர்ந்தெடுத்து மேன்மைப்படுத்தி வைத்துள்ளான்.

அதில் அரஃபா தினம், துல் ஹிஜ்ஜாவின் முதல் பத்து நாட்கள் ஆகியவற்றையும் மற்ற நாட்களை விட மேலான நாட்களாக இந்த உம்மத்திற்கு அல்லாஹ் சுப்ஹானஹூ வ தஆலா மேன்மைப்படுத்தி தேர்ந்தெடுத்து உள்ளான்.

ஜாபிர் ரலியல்லாஹு அன்ஹு அவர்கள் அறிவிக்கிறார்கள்:

இந்த துனியாவுடைய நாட்களிலேயே மிகச் சிறந்த நாட்கள் துல் ஹிஜ்ஜாவின் முதல் பத்து நாட்கள் ஆகும் என்று ரஸூலுல்லாஹி ﷺ அவர்கள் கூறினார்கள்.

நூல்: முஸ்னத் அல் பஸ்ஸார், அஷ்-ஷெய்க் அல்-அல்பானி ரஹிமஹுல்லாஹ் அவர்கள் இந்த ஹதீஸை ஸஹீஹ் என்று குறிப்பிட்டுள்ளார்கள்.

ஆகவே, அல்லாஹ் சுப்ஹானஹு வ தஆலா கூறுகின்ற வாறு:

﴿وَرَبُّكَ يَخْلُقُ مَا يَشَآءُ وَيَخْتَارُ﴾

என்ற வசனத்தில்: "தான் நாடியவற்றைப் படைக்கிறான், தான் விரும்பியவற்றை தேர்ந்தெடுக்கின்றான்" (சூரா அல் கஸஸ்: 68) என்று கூறியதைப் போல் துனியாவுடைய நாட்களிலேயே மிகச் சிறந்த நாட்களாக துல் ஹிஜ்ஜாவின் முதல் பத்து நாட்களை தேர்ந்தெடுத்து உள்ளான்.

ஷெய்குல் இஸ்லாம் இப்னு தைமிய்யாஹ் ரஹிமஹுல்லாஹ் அவர்களிடத்தில், ரமலான் மாதத்தின் கடைசி பத்து நாட்கள் சிறந்ததா? அல்லது துல் ஹஜ் மாதத்தின் முதல் பத்து நாட்கள் சிறந்ததா? என்று கேள்வி கேட்கப்பட்டபோது, துல்ஹஜ் மாதத்தின் முதல் பத்து நாட்களின் பகல்கள் ரமலான் மாதத்தின் இறுதி பத்து பகல்களை விட சிறந்ததாகும்; அதேபோன்று ரமலானுடைய இறுதி பத்து இரவுகள் துல்ஹஜ் மாதத்தின் முதல் பத்து இரவுகளை விட சிறந்ததாகும் என்று கூறினார்.

எனவே நாட்களில் பகல் பொழுதில் சிறந்தது துல்ஹஜ் மாதத்தின் முதல் பத்து நாட்கள் ஆகும். அதேபோன்று லைலதுல் கத்ர் இரவு இருப்பதால் இரவுகளில் சிறந்தது ரமலான் மாதத்தின் இறுதி பத்து நாட்கள் ஆகும்.

இமாம் இப்னுல் கைய்யிம் ரஹிமஹுல்லாஹ் அவர்கள் இந்த பதிலை கூறிவிட்டு, "ஒரு புத்திசாலி மனிதன் இந்த பதிலை ஆழ்ந்து யோசித்தால் இதை விட ஒரு சிறந்த பதிலை காணமாட்டார்" என்று கூறுகிறார்.

இதைக்குறித்து இமாம் இப்னுல் கைய்யிம் மேலும் கூறும்போது, "துல்ஹஜ் மாதத்தின் முதல் பத்து நாட்களில், உள்ஹிய்யா என்ற அறுத்து பலி கொடுக்கக்கூடிய பத்தாவது தினமான யவ்முன் நஹ்ர் (يوم النحر), ஒன்பதாவது தினமான யவ்மு அரஃபா (يوم عرفة) , ஹஜ் செய்யக் கூடியவர்கள் ஹஜ்ஜை துவங்க கூடிய எட்டாவது தினமான யவ்முத் தர்வியா (يوم التروية) ஆகிய இந்த அனைத்து நாட்களும் துல்ஹஜ் மாதத்தின்

முதல் பத்து நாட்களின் பகல்களில் இருப்பதால் இதைவிட அல்லாஹ்விற்கு விருப்பமான வேறு நாட்கள் இருக்க முடியாது" என்று கூறியுள்ளார்.

எனவே நாட்களிலே சிறந்த நாட்கள் துல்ஹஜ் மாதத்தின் இந்த முதல் பத்து நாட்களாகும். அதனால்தான் அல்லாஹ் சுப்ஹானஹு வ தஆலா சூரா ஃபஜ்ரிலே சத்தியம் செய்து கூறுகிறான்:

﴿وَٱلۡفَجۡرِ ۝ وَلَيَالٍ عَشۡرٍ﴾

விடியற்காலையின் மீது சத்தியமாக! பத்து இரவுகளின்மீதும் சத்தியமாக! (சூரா அல் ஃபஜ்ர்: 1-2)

இதைக்குறித்து இப்னு கஸீர் ரஹிமஹுல்லாஹ் தனது தஃப்ஸீரில் கூறும்போது:

"அல்லாஹ் இந்த ஆயத்தில் சத்தியம் செய்து கூறக்கூடிய பத்து இரவுகள் துல்ஹஜ் மாதத்தின் முதல் பத்து நாட்களுடைய இரவுகள் ஆகும். இதைத்தான் அல்லாஹ் இங்கு கருதுகிறான். இப்னு அப்பாஸ் ரழியல்லாகு அன்ஹுமா மற்றும் மற்ற ஸலஃப்களும், அவர்களுக்கு பின் வந்த உலமாக்களும் மற்றும் முஃபஸ்ஸிரீன்களுடைய கருத்துக்களும் இதுவாகத்தான் இருக்கிறது. இதுதான் சரியான கருத்தாகவும் இருக்கிறது" என்று கூறியுள்ளார்.

அல்லாஹ் தபாரக வ தஆலா இந்த பத்து நாட்களை தேர்ந்தெடுத்துள்ளான். அதேபோல் அந்த பத்து நாட்களுடைய இரவுகள் மீது சத்தியம் செய்துள்ளான். அல்லாஹ் ஒரு பொருள் மீது சத்தியம் செய்வதால் அந்தப் பொருள் எந்த அளவிற்கு மேன்மையானது, மகத்துவமிக்கது, பெறுமதியானது என்பதை உணர்த்துகிறது.

எனவே குறிப்பிட்ட அந்த நாட்களில் செய்யப்பட வேண்டிய மேலான ஸாலிஹான நல்லமல்ளுக்காக அல்லாஹ் தபாரக வ தஆலா துல்ஹஜ் மாதத்தின் முதல் பத்து நாட்களை மிகவும் மகத்துவமான நாட்களாக மேன்மைப்படுத்தி மனிதனுக்காக தேர்ந்தெடுத்துள்ளான்.

அதேபோல் அல்-குர்ஆனில் இன்னும் சில வசனங்களிலும் அல்லாஹ் சுப்ஹானஹூ வ தஆலா கூறுகிறான்:

﴿وَاَذِّنْ فِى النَّاسِ بِالْحَجِّ يَاْتُوْكَ رِجَالًا وَّعَلٰى كُلِّ ضَامِرٍ يَّاْتِيْنَ مِنْ كُلِّ فَجٍّ عَمِيْقٍ﴾

“ஹஜ்ஜுக்காக (அதைச் செய்ய வருமாறு) நீர் மனிதர்களை அழைப்பீராக!” (அவ்வழைப்பை ஏற்று) அவர்கள் நடந்தவர்களாக உம்மிடம் வருவார்கள், இன்னும், இளைத்த (களைப்புற்ற) ஒட்டகங்களின் மீது (சவாரி செய்தவர்களாகவும் வருவார்கள்.) அவை தூரமான ஒவ்வொரு வழியிலிருந்தும் (அவர்களைக்கொண்டு) வரும். (சூரா அல் ஹஜ்: 27)

﴿لِّيَشْهَدُوْا مَنَافِعَ لَهُمْ وَيَذْكُرُوا اسْمَ اللّٰهِ فِىْٓ اَ يَّامٍ مَّعْلُوْمٰتٍ عَلٰى مَا رَزَقَهُمْ مِّنْ بَهِيْمَةِ الْاَنْعَامِ  فَكُلُوْا مِنْهَا وَاَطْعِمُوا الْبَآٮِٕسَ الْفَقِيْرَ﴾

தங்களுக்குரிய (இம்மை மறுமையின்) பலன்களை அவர்கள் அடைவதற்காகவும், அல்லாஹ்வின் பெயரை – அவன் அவர்களுக்குக் கொடுத்த (குர்பானிப் பிராணிகளான ஆடு, மாடு, ஒட்டகம் முதலிய) நாற்கால் பிராணிகள் மீது குறிப்பிடப்பட்ட நாட்களில் கூறுவதற்காகவும் (வருவார்கள்.) ஆகவே, அ(றுக்கப்பட்ட)வைகளிலிருந்து, நீங்களும் புசியுங்கள், கஷ்டப்படும் ஏழைக்கும் உண்ணக் கொடுங்கள். (சூரா அல் ஹஜ்: 28)

இந்த வசனத்தில் 'குறிப்பிட்ட நாட்கள்' ( أَيَّامٍ مَّعْلُوْمٰتٍ ) என்று அல்லாஹ் கருதுவது துல்ஹஜ் மாதத்தின் முதல் பத்து நாட்களாகும் என்று இப்னு அப்பாஸ், இப்னு உமர் ரலியல்லாஹு அன்ஹும் போன்ற ஸஹாபாக்கள் கொடுத்துள்ள தஃப்ஸீர்களில் வந்துள்ளது. மேலும் அதிகமான உலமாக்களும் (ஜும்ஹூர்) இந்தக் கருத்தைக் கொண்டுள்ளார்கள்.

மேலும் அல்லாஹ் தபாரக வ தஆலா மற்றொரு இடத்தில் இந்த நாட்களை குறிப்பிட்டுள்ளான்.

﴿اَلْحَجُّ اَشْهُرٌ مَّعْلُوْمٰتٌ﴾

ஹஜ்ஜுக்குரிய காலம் அறியப்பட்ட மாதங்களாகும் (சூரா அல் பகரா: 197)

அதாவது அறியப்பட்ட மாதங்கள் (اَشْهُرٌ مَّعْلُوْمٰتٌ) என்பது குறைஷிகளுக்கு மத்தியில் அறியப்பட்ட குறிப்பிட்ட மாதங்களாகும் என்று கூறுகிறான்.

இப்னு உமர், இப்னு அப்பாஸ் ரழியல்லாகு அன்ஹும் மற்றும் ஸலஃப் உலமாக்களின் அதிகமானோர் ஹஜ்ஜை சேர்ந்த மாதங்கள் என்பது ஷவ்வால், துல் கஅதா மற்றும் துல்ஹஜ் மாதத்தில் முதல் பத்து நாட்கள் என்று கூறியுள்ளார்கள். மற்றும் சில உலமாக்கள் துல்ஹஜ் மாதம் முழுவதும் இதில் வரும் என்றும் கூறியுள்ளார்கள்.

எனவே இத்தகைய வசனங்களில் அல்லாஹ் சுப்ஹானஹு வ தஆலா துல்ஹஜ் மாதத்தின் பத்து நாட்களை குறிப்பிட்டுள்ளான்.

இவை அனைத்தும் இந்த பத்து நாட்களுடைய முக்கியத்துவத்தையும், அருமையையும், மேலும் அதனுடைய மேன்மையையும், சிறப்பையும் மகத்துவத்தையும் காட்டுகிறது.

## துல் ஹிஜ்ஜாவின் முதல் பத்து நாட்களில் செய்யவேண்டிய நல்-அமல்கள்

இந்த நாட்களில் நாம் செய்யவேண்டிய நற்செயல்கள் என்ன?

இமாம் புகாரி ரஹிமஹுல்லாஹ் அவர்கள் தன்னுடைய ஸஹீஹ் அல்-புகாரியில் அய்யாமுல் தஷ்ரீக் என்ற துல்ஹஜ் மாதத்தின் 11,12,13 ஆகிய நாட்களில் செய்யப்படும் அமல்களின் சிறப்பு என்ற தலைப்பின் கீழ் கீழ்க்கண்ட ஹதீஸை பதிவு செய்துள்ளார்.

இப்னு அப்பாஸ் ரலியல்லாஹு அன்ஹுமா அறிவிக்கிறார்கள்: "இந்த (துல்ஹஜ் மாதத்தின்) பத்து நாட்களில் செய்யப்படக்கூடிய நற்செயல்களை விட சிறந்த நாட்கள் இருக்க முடியாது" என்று ரஸூலுல்லாஹி ﷺ கூறியபோது ஸஹாபாக்கள், "ஜிஹாத் செய்வதைவிடவுமா?" என்று கேட்டனர். அதற்கு ரஸூலுல்லாஹி ﷺ அவர்கள் : “அல்லாஹ்வின் பாதையில் ஜிஹாத் செய்வதைவிடவும் சிறந்தது தான். ஆயினும் தனது உயிருடனும், தனது செல்வத்துடனும் புறப்பட்டுச் சென்று அவ்விரண்டில் எதையும் திரும்பக் கொண்டுவராதவரைத் தவிர" என்று கூறினார்கள்.

இதே ஹதீஸ் திர்மிதியில் "இந்த (துல்ஹஜ் மாதத்தின்) பத்து நாட்களில் செய்யப்படக்கூடிய நற்செயல்களை விட மிகவும் அல்லாஹ்விற்கு விருப்பமான நற்செயல்கள் வேறு எதுவும் இருக்க முடியாது" என்று வந்துள்ளது.

அதேபோல் தாரமி, பைஹகி ஆகிய புத்தகங்களில் வரும் அறிவிப்பில், நாட்களிலேயே மிகவும் சிறந்த அமல்கள் நடைபெறக்கூடிய நாட்கள் துல்ஹிஜ்ஜாவுடைய முதல் பத்து நாட்கள் என்று ரஸூலுல்லாஹி ﷺ அவர்கள் கூறியதாக வந்துள்ளது.
அஷ்-ஷெய்க் அல்-அல்பானி ரஹிமஹுல்லாஹ் அவர்கள் இதை ஹஸன் என்று கூறியுள்ளார்கள் .

அல்லாஹ் சுப்ஹானஹூ வ தஆலா இந்த பத்து நாட்களை ஏன் மேன்மைப்படுத்தி வைத்துள்ளான் என்பதை குறித்து அல்-ஹாஃபிழ் இப்னு ஹஜர் ரஹிமஹுல்லாஹ் கூறும்போது: «இந்த நாட்களில் எல்லா நற்செயல்களும் ஒன்று சேர்ந்து செய்யப்படலாம் என்று கூறியுள்ளார்.»

அதாவது இந்த நாட்களில் ஹஜ்ஜுக்குரிய நற்செயல்கள், தொழுகைகள், நோன்பு வைப்பது உட்பட அனைத்து விதமான நற்செயல்களும் செய்யப்படலாம். ஆனால் மற்ற நாட்களில் இந்த அனைத்து நற்செயல்களும் ஒன்றுசேர முடியாது. ஏனெனில் ஒரு வருடத்தில் இந்த நாட்களிலே அன்றி மற்ற நாட்களில் ஹஜ் செய்ய முடியாது. இதன் காரணமாகவே அல்லாஹ் சுப்ஹானஹூ வ தஆலா இந்த பத்து நாட்களுக்கு இத்தகைய சிறந்த அந்தஸ்தை தன்னிடத்தில் வைத்துள்ளான்.

**அதேபோல் இந்த நாட்களில் குறிப்பாக ரஸுலுல்லாஹி ﷺ அதிகமாக திக்ர் செய்யுமாறு ஏவியுள்ளார்கள்.**

இப்னு உமர் ரலியல்லாஹு அன்ஹுமா அவர்கள் அறிவிக்கின்றார்கள்: «நாட்களிலேயே மிகவும் சிறந்த நாட்களாக அல்லாஹ்விற்கு அவைகளில் நற்கருமங்கள் செய்வது மிகவும் விருப்பமாக இருக்கக்கூடிய நாட்கள் இந்த பத்து நாட்களை அன்றி வேறு நாட்களாக இருக்க முடியாது. எனவே இந்த பத்து நாட்களில் நீங்கள் அதிக அதிகமாக லாஇலாஹ இல்லல்லாஹ் என்று தஹ்லீல் செய்யுங்கள், அல்லாஹு அக்பர் என்று கூறி தக்பீர் செய்யுங்கள், அல்ஹம்துலில்லாஹ் என்று கூறி தஹ்மீது செய்து அல்லாஹ்வை புகழுங்கள்» என்று ரஸுலுல்லாஹி ﷺ கூறியுள்ளார்கள். நூல்: (முஸ்னத் அஹ்மத்)

இப்னு உமர் மற்றும் அபூஹுரைரா ரலியல்லாஹு அன்ஹும் ஆகிய இரண்டு ஸஹாபாக்களும் இந்த பத்து நாட்களில் கடை வீதிகளுக்கு சென்று தக்பீர் கூறக் கூடியவர்களாக இருந்திருக்கின்றார்கள். அவர்களைப் பார்த்த மக்களும் அவர்களுக்குப் பின்னால் அவர்களை முன்மாதிரியாகக் கொண்டு தக்பீர் கூறக் கூடியவர்களாக இருப்பார்கள்.

இது இமாம் புகாரி ஸஹீஹுல் புஹாரியில் முழு அறிவிப்பாளர் தொடர் இல்லாமல் பதிவு செய்துள்ளார். மேலும் இதை இமாம் இப்னு ஹுமைத் ரஹிமஹுல்லாஹ் அறிவிப்பாளர் தொடரோடு பதிவு செய்துள்ளார். அஷ்ஷெய்க் அல்-அல்பானி ரஹிமஹுல்லாஹ் இதை ஸஹீஹ் என்று கூறியுள்ளார்கள்.

எனவே இது ஸஹாபாக்களுடைய செயலாகும். நாமும் இந்த பத்து நாட்களில் ரஸுலுல்லாஹி ﷺ கூறியது போன்று லா இலாஹ இல்லல்லாஹ், அல்லாஹு அக்பர், அல்ஹம்துலில்லாஹ் போன்ற திக்ருகளை அதிக அதிகமாக செய்வது அல்லாஹ்வுக்கு மிகவும் விருப்பமான செயலாக இருக்கின்றது.

மேலும் இந்த நாட்களில் ஹஜ் செய்பவர்கள் முதலில் உம்ரா செய்யலாம் பின்னர் இஹ்ராமை கலையாமல் அப்படியே ஹஜ் செய்யலாம். அல்லது உம்ரா செய்து விட்டு இஹ்ராமைக் கலைந்து விட்டு பிறகு யவ்முத்

தர்வியா என்ற எட்டாவது நாள் மீண்டும் இஹ்ராம் அணிந்து ஹஜ்ஜுடைய அமல்களை ஆரம்பிக்கலாம்.

## அரஃபா தினம்

யவ்மு அரஃபா என்ற ஒன்பதாவது தினம் இஸ்லாமிய மார்க்கத்தில் மிகவும் சிறந்த மேன்மையான ஒரு நாளாகும்.

அந்த அரஃபா தினத்தில் ஹஜ்ஜாஜிகள் அரஃபா என்ற பிரதேசத்திற்கு சென்று அங்கு இருந்து துஆ, திக்ர் போன்ற அமல்களில் ஈடுபடுவார்கள்.

ஹஜ் என்பது அரஃபாவிற்கு சென்று இருப்பதாகும் என்று ரஸுலுல்லாஹி ﷺ அவர்கள் கூறுகின்றார்கள்.

ஆகவே அரஃபாவிற்கு சென்று தங்குவது ஹஜ்ஜுடைய (ருகுன்) முக்கிய தூன் ஆகும்.

ஒருவர் அரஃபாவில் தங்கவில்லை என்றால் அவருடைய ஹஜ் ஏற்றுக்கொள்ளப்படமாட்டாது.

அதேபோன்று அந்த அரஃபா தினத்தன்று ஹஜ் செய்யாதவர்கள் நோன்பு நோற்பது மிகவும் சிறந்த ஒரு நற்செயலாகும்.

அபூ கதாதா ரலியல்லாஹு அன்ஹு அவர்கள் அறிவிக்கின்றார்கள்: ஒரு நபர் ரஸுலுல்லாஹ்விடத்தில் வந்து அரஃபா தினத்தன்று நோன்பு பிடிப்பது சம்பந்தமாக கேள்வி கேட்ட போது, ரஸுலுல்லாஹி ﷺ கூறினார்கள்: «"அரஃபா தினத்தன்று நோன்பு வைப்பது முன்சென்ற வருடத்திலும் பின் வரக்கூடிய வருடத்திலும் நிகழ்ந்து விடுகின்ற பாவங்களுக்கு பரிகாரமாக இருக்கின்றது"» என்று கூறினார்கள். நூல்: (ஸஹீஹ் முஸ்லிம்)

எனவே நாம் அரஃபா தினத்தன்று நோன்பு நோற்பதற்கு ஆர்வம் காட்ட வேண்டும். அதை ஒருபோதும் விட்டு விடக்கூடாது.

அதேபோன்று அரஃபா தினத்தன்று செய்ய வேண்டிய மற்றொரு முக்கியமான காரியம் அந்த நாளில் துஆ செய்வதாகும். இது ரஸுலுல்லாஹ்வின் ஸுன்னாவாக இருந்தது.

அப்துல்லாஹ் இப்னு அம்ர் இப்னுல்ஆஸ் ரலியல்லாஹு அன்ஹு அறிவிக்கிறார்கள்; «'துஆக்களில் மிகவும் சிறந்த துஆ அரஃபா தினத்தில் செய்யப்படக்கூடிய துஆ நானும் எனக்கு முன் வந்த நபிமார்களும் கூறிய கூற்றுகளில் மிகச் சிறந்த கூற்று லா இலாஹ இல்லல்லாஹு வஹ்தஹு லா ஷரீக லஹு லஹுல் முல்கு வலஹுல் ஹம்து வஹுவ அலா குல்லி ஷையின் கதீர் ஆகும்» என்று ரஸுலுல்லாஹி ﷺ கூறினார்கள். நூல்: (திர்மதி முஸ்னத் அஹ்மத்) அஷ் ஷெய்க் அல்-அல்பானி ரஹிமஹுல்லாஹ் இதை ஹஸன் என்று கூறியுள்ளார்கள்.

எனவே இந்த திக்ர் மேலும் துஆவை நாம் அதிகமாக செய்ய வேண்டும். அதே போன்று நமது தேவைகளை அதிக அதிகமாக அல்லாஹ்விடம் கேட்டுக்கொள்வது சிறந்த ஒரு காரியமாகும்.

ஆயிஷா ரலியல்லாஹு அன்ஹா அவர்கள் அறிவிக்கின்றார்கள்; «'அல்லாஹ் தபாரக வ தஆலா அதிக அதிகமாக தனது அடியார்களை நரகத்திலிருந்து விடுதலை செய்யக்கூடிய தினம் அரஃபா தினத்தை விட வேறு தினம் இருக்க முடியாது'» என்று ரஸுலுல்லாஹி ﷺ கூறினார்கள். நூல்: (ஸஹீஹ் முஸ்லிம்)

அதேபோன்று அரஃபா தினத்தன்று மாலை பகுதியில் அல்லாஹ் தன்னுடைய அடியார்களின் பால் நெருங்கி வருகிறான் பிறகு மலக்குமார்கள் இடத்தில் அவர்களைப் பாராட்டிப் பேசுகிறான். எனது அடியார்கள் என்ன நாடுகிறார்கள் என்று மலக்குமார்கள் இடத்தில் அல்லாஹ் கேட்கிறான்.

அபூஹுரைரா மற்றும் அப்துல்லாஹ் இப்னு அம்ர் இப்னுல்ஆஸ் ரலியல்லாஹு அன்ஹும் ஆகியோர் அறிவிக்கிறார்கள்; «'நிச்சயமாக அல்லாஹ் சுப்ஹானஹு வ தஆலா அரஃபா தினத்தின் மாலையில் அரஃபாவிற்கு வந்திருக்கக்கூடிய மக்களை குறித்து மலக்குமார்களிடம் புகழ்ந்து பேசுகிறான். "எனது மலக்குமார்களே! எனது அடியார்களை

நோக்கி பாருங்கள். அவர்களில் அந்தஸ்த்து உள்ளவர்கள், அந்தஸ்து இல்லாதவர்கள் என அனைவரும் பரட்டை தலையுடையவர்களாகவும், புழுதி படிந்தவர்களாகவும் என்னிடம் வந்துள்ளார்கள் என்று அல்லாஹ் கூறுகிறான்.» என்று ரஸூலுல்லாஹி ﷺ கூறினார்கள். நூல்: (முஸ்னத் அஹ்மத்)

அரஃபா தினம் என்பது இஸ்லாமிய வரலாற்றில் மிகவும் முக்கியமான ஒரு தினமாக இருக்கிறது.

அன்றைய தினத்தில் தான் அல்லாஹ் சுப்ஹானஹூ வ தஆலா இஸ்லாமிய மார்க்கத்தை பரிபூரணப் படுத்தி கொடுத்தான்.

உமர் ரலியல்லாஹு அன்ஹு அறிவிக்கின்றார்கள்; «"யூதர் ஒருவர் உமர் ரலியல்லாஹு அன்ஹு அவர்களிடம் வந்து, "யா அமீரல் முஃமினீன்! உங்களுடைய புத்தகத்தில் ஒரு வசனம் இருக்கின்றது. இந்த வசனம் யூதர்களாகிய எங்கள் மீது இறங்கி இருந்தால் அந்த நாளை நாங்கள் பெருநாளாக எடுத்து இருப்போம்" என்று கூறினார். அப்பொழுது உமர் ரலியல்லாஹு அன்ஹு அவர்கள் "அது எந்த வசனம்?" என்று கேட்டார்கள். அதற்கு அந்த யூதன்

﴿ٱلْيَوْمَ أَكْمَلْتُ لَكُمْ دِينَكُمْ وَأَتْمَمْتُ عَلَيْكُمْ نِعْمَتِى وَرَضِيتُ لَكُمُ ٱلْإِسْلَـٰمَ دِينًا﴾

இன்றையத்தினம் உங்களுக்காக உங்களுடைய மார்க்கத்தை நான் பரிபூரணமாக்கி வைத்து விட்டேன், என்னுடைய அருட்கொடையை உங்களின் மீது முழுமையாமாக்கி விட்டேன், இன்னும் உங்களுக்காக இஸ்லாத்தை மார்க்கமாக நான் பொருந்திக் கொண்டேன். (சூரா அல் மாயிதா: 3)

என்ற வசனத்தை ஓதிக் காட்டினான். அதற்கு உமர் ரலியல்லாஹு அன்ஹு அவர்கள், "அல்லாஹ்வின் மீது சத்தியமாக இந்த வசனம் எப்பொழுது ரஸூலுல்லாஹி ﷺ மீது அல்லாஹ் இறக்கி வைத்தான் என்று எனக்குத் தெரியும். நிச்சயமாக இந்த வசனமானது ரஸூலுல்லாஹி ﷺ அரஃபா தினத்தன்று அரபாவில் நின்று கொண்டு இருந்த பொழுது அல்லாஹ் சுப்ஹானஹூ வ தஆலா நபி ﷺ மீது இறக்கி வைத்தான். அந்த

அரஃபா தினம் ஜும்ஆ தினமாக இருந்தது") என்று கூறினார்கள். நூல்கள்: (ஸஹீஹ் அல்-புஹாரி, ஸஹீஹ் முஸ்லிம்)

ஆகவே இந்த அரஃபா தினம் என்பது முஸ்லிம்களுக்கு பெருநாள் தினமாக இருக்கின்றது. நாம் அந்த நாளில் நோன்பு வைத்தாலும் சரி அந்நாளை பெருநாள் தினமாக கருத வேண்டும்.

உக்பத் இப்னு ஆமிர் ரலியல்லாஹு அன்ஹு அவர்கள் அறிவிக்கக்கூடிய ஹதீஸில்; («'நிச்சயமாக அரஃபா தினம் ( ஒன்பதாவது தினம்), யவ்முந் நஹ்ர் (பத்தாது தினம்), அய்யாமுத் தஷ்ரீக் (11, 12, 13 வது தினம்) ஆகிய இந்த அனைத்து தினங்களும் பெருநாள் தினங்களாகும். மேலும் இந்த நாட்களில் உணவுகளை பெற்று சந்தோஷமாக இருக்க கூடிய நாளாகவும் இருக்கிறது.» என்று ரஸுலுல்லாஹி ﷺ கூறினார்கள். நூல்கள்: (ஸுனன் அபுதாவூத், திர்மிதி, நஸாஈ) அஷ்ஷெய்க் அல்-அல்பானி, அஷ்ஷெய்க் முக்பில் ரஹிமஹுமுல்லாஹ் இந்த ஹதீஸை ஸஹீஹ் என்று கூறியுள்ளார்கள்.

எனவே அரஃபா தினம் என்பது பெருநாள் தினமாக இருக்கின்றது. மேலும் இஸ்லாமிய வரலாற்றில் மிகவும் முக்கியமான ஒரு நாளாகவும் இருக்கின்றது என்பதை மேற்கண்ட ஆதாரங்களிலிருந்து விளங்கிக் கொள்ள முடிகின்றது.

## யவ்முந் நஹ்ர் (அறுத்து பலியிடும் தினம்)

யவ்முந் நஹ்ர் என்ற பத்தாது தினம் வருடத்தில் வரக்கூடிய நாட்களிலேயே மிகவும் சிறந்த ஒரு நாளாக இருக்கின்றது. எவ்வாறு ஒவ்வொரு கிழமையிலும் ஜும்மா தினம் சிறந்ததோ அதேபோன்று ஒவ்வொரு வருடத்திலும் உள்ள சிறந்த நாள் துல்ஹஜ் மாதத்தின் பத்தாவது நாள் ஆகும்.

அப்துல்லாஹ் இப்னு குர்த் அல் அஸ்தி அல் ஸிமாலி ரலியல்லாஹு அன்ஹு அவர்கள் அறிவிக்கின்றார்கள்; «'நிச்சயமாக அல்லாஹ்விடத்தில் நாட்களிலேயே மிகவும் மகத்துவமான நாளாக

(துல்ஹிஜ்ஜாவின் பத்தாவது தினமாகிய) யவ்முன்-நஹ்ர் இருக்கின்றது.» என்று ரஸூலுல்லாஹி ﷺ கூறினார்கள். நூல்: (முஸ்னத் அஹ்மத்)

யவ்முன் நஹ்ர் (يوم النحر) என்றால் அறுத்து பலியிடும் தினமாகும். இந்த நாளில் தான் மக்கள் அல்லாஹ்விற்காக ஆடு, மாடு, ஒட்டகங்களை அறுத்து பலியிட்டு அல்லாஹ்வின்பால் நெருங்கக் கூடிய நாளாக இருக்கிறது. இது அல்லாஹ்விடத்தில் மிகவும் விருப்பத்திற்குரிய செயலாக இருக்கின்றது.

அல்லாஹ் தன்னுடைய அடியார்களிடம் வழங்கியுள்ள செல்வத்தில் அவனுக்கு மிகவும் விருப்பமான செயல், அவர்கள் நாற்கால் பிராணிகளாகிய ஆடு, மாடு, ஒட்டகத்தை அல்லாஹ்வுக்காக வேண்டி அறுத்து பலி கொடுத்து அதன் இரத்தங்களை சிந்துவதாகும்.

அதேபோன்று இந்த பிராணிகளின் இரத்தத்தை அல்லாஹ்விற்காக இல்லாமல் ஜின்களுக்கு, நபிமார்களுக்கு அல்லது அவ்லியாக்களுக்காக வேண்டி சிந்துவது ஷிர்க்காகும். இது மிகப்பெரிய பாவமான செயலாக இருக்கிறது. எனவே முஸ்லிம்கள் அனைவரும் இத்தகைய செயல்களிலிருந்து தவிர்ந்து கொள்ள வேண்டும்.

அறுத்து பலி கொடுக்க வேண்டிய இந்த செயல் அல்லாஹ் சுப்ஹானஹூ வ தஆலாவுக்கு மட்டுமே உரியதாகும். அதனால் தான் அல்லாஹ் கூறுகின்றான்:

﴿فَصَلِّ لِرَبِّكَ وَٱنْحَرْ﴾

ஆகவே, நீர் உமதிரட்சகனைத் தொழுது இன்னும் (குர்பானியும் கொடுத்து அதை) அறுப்பீராக. (சூரா அல் கவ்ஸர்: 2)

இந்த வசனத்தில் அல்லாஹ் சுப்ஹானஹூ வ தஆலா அறுத்து பலியிடுவதை தொழுகையுடன் சேர்த்து கூறுகிறான். இதை வைத்து உலமாக்கள் கூறுகிறார்கள்; அல்லாஹ்விற்கு மிகவும் விருப்பமான செயல் தொழுகையாகும். அதேபோன்று செல்வங்களில் இருந்து செய்யப்படக்கூடிய மிகவும் சிறந்த இபாதத் அறுத்து பலியிட்டு இரத்தத்தை சிந்தக்கூடிய இபாதத் ஆகும்.

அதேபோல் இந்த தினம் சம்பந்தமாக மற்றொரு ஹதீஸில் அலி ரலியல்லாஹு அன்ஹு அறிவிக்கின்றார்கள்: «'யவ்முந் நஹ்ர் என்ற அறுத்து பலியிடும் நாள் தான் பெரும் ஹஜ்ஜுடைய நாளாகும்.» என்று ரஸுலுல்லாஹி ﷺ கூறினார்கள். நூல்: (ஸுனன் அத் திர்மிதி) இந்த ஹதீஸை அஷ்ஷெய்க் அல்-அல்பானி ரஹிமஹுல்லாஹ் ஸஹீஹ் என்று கூறியுள்ளார்கள்.

அந்த நாளை குறித்து அல்லாஹ் சுப்ஹானஹு வ தஆலா அல்குர்ஆனில் சூரா தவ்பாவின் முதல் பகுதியில் குறிப்பிட்டுள்ளான்.

இந்த தினத்தை குறித்து ரஸுலுல்லாஹி ﷺ அவர்கள் விளக்கும் போது «'யவ்முந் நஹ்ர் என்பது பத்தாவது நாள் ஆகும்.» என்று கூறியுள்ளார்கள்.'

இந்த தினம் அல்லாஹ்வினால் ஹராமாக்கப்பட்ட ஒரு தினம் ஆகும். அதாவது புனிதமாக்கப்பட்ட ஒரு தினமாகும்.

இதைக்குறித்து அபூபக்ரா ரலியல்லாஹு அன்ஹு அறிவிக்கக்கூடிய ஹதீஸில்; «'நிச்சயமாக உங்களுடைய இரத்தங்கள், உங்களுடைய மானங்கள், உங்களுடைய செல்வங்கள் அனைத்தும் ஹராம் ஆக்கப்பட்டுள்ளது. அவைகளை அநீதியாக எடுப்பது ஹராமாகும். எவ்வாறு இந்த தினம் (10வது தினம்), இந்த மாதம் (துல்ஹஜ்), இந்த இடம் (மக்கா) ஹராம் ஆக்கப்பட்டுள்ளதோ அதேபோன்று முஸ்லிம்களுடைய மானங்கள், அவர்களுடைய உயிர்கள், அவர்களுடைய செல்வங்களையும் அல்லாஹ் ஹராமாக்கி (புனிதமாக்கி) வைத்துள்ளான். அவைகளை அநீதியாக எடுப்பதோ, அநீதியாக செலவு செய்வதோ, அநீதியாக இரத்தங்களை சிந்துவதோ அல்லாஹ் ஹராமாக்கிய மிகவும் பாவமான விஷயமாகும்.'» நூல்கள்: (ஸஹீஹ் அல்-புகாரி, ஸஹீஹ் முஸ்லிம்)

ஆகவே இதிலிருந்து துல்ஹஜ் பத்தாவது நாள் புனிதமான நாள் என்பது தெளிவாகிறது.

மேலும் இந்த நாளில் ரஸுலுல்லாஹி ﷺ உள்ஹிய்யா கொடுக்கக் கூடியவர்களாக இருந்துள்ளார்கள்.

அனஸ் பின் மாலிக் ரலியல்லாஹூ அன்ஹூ அறிவிக்கின்றார்கள்; «'ரஸூலுல்லாஹி ﷺ அவர்கள் இரண்டு ஆடுகளை அல்லாஹ்வுடைய பெயரைக் கூறி தக்பீர் கூறி அவர்களுடைய காலை அந்த ஆட்டின் மீது வைத்து தனது புனிதமான கைகளால் அறுத்து ரத்தத்தை சிந்த வைத்து உள்ஹிய்யா கொடுத்தார்கள்.» நூல்கள்: (ஸஹீஹ் அல்-புகாரி, ஸஹீஹ் முஸ்லிம்)

உள்ஹிய்யாவை குறித்து உலமாக்களுக்கு மத்தியில் இருக்கும் கருத்துக்களில் அதிகமான உலமாக்கள் கூறிய சரியான கருத்து உள்ஹிய்யா என்பது கடமை அல்ல மாறாக அல்லாஹ் விரும்பக்கூடிய முஸ்தஹபான செயலாகும். அதை விட்டுவிட்டால் பாவமல்ல. ஆனால் செல்வத்தை உடையவர்கள் உள்ஹிய்யா கொடுப்பது மிகவும் சிறந்ததாகும்.

ரஸூலுல்லாஹி ﷺ அவர்கள் உள்ஹிய்யா கொடுப்பதில் எங்களுக்கு முன் மாதிரியாக செய்து காட்டியுள்ளார்கள். அதேபோல் உற்சாகப் படுத்தி உள்ளார்கள். அதே வேளையில் உள்ஹிய்யா என்பது பெருநாள் தொழுகையைத் தொழுது முடித்த பிறகுதான் கொடுக்க வேண்டும். யார் ஒருவர் தன்னுடைய உள்ஹிய்யாவை தொழுகைக்கு முன்னால் கொடுத்து விடுகின்றாரோ அது உள்ஹிய்யாவாக ஏற்றுக் கொள்ளபபடமாட்டாது.

உள்ஹிய்யா கொடுப்பதற்கு எண்ணம் கொண்டவர் துல்ஹிஜ்ஜாவுடைய பத்து நாட்கள் ஆரம்பித்துவிட்டாள் அவர் தன்னை தயார் செய்து கொள்ள வேண்டும்.

உம்மு ஸலமா ரழியல்லாஹூ அன்ஹா அறிவிக்கின்றார்கள்: «'உங்களில் ஒருவர் உள்ஹிய்யா கொடுக்க நாடினால் அவர் தன்னுடைய முடிகளையோ, நகங்களையோ அகற்றுவதிலிருந்து தவிர்ந்து கொள்ளட்டும்.» என்று ரஸூலுல்லாஹி ﷺ கூறினார்கள். நூல்: (ஸஹீஹ் முஸ்லிம்)

இதற்கு பின்னால் உள்ள ஹிக்மத்தை குறித்து சில உலமாக்கள் விளக்கும் போது; அல்லாஹ் ஒருவரை நரக வேதனையிலிருந்து விடுதலை செய்யும் பொழுது அவர் பரிபூரணமாக இருக்க வேண்டும் என்பதை அதன் ஹிக்மத்தாக விளக்கியுள்ளார்கள். மேலும் சில உலமாக்கள் கூறும்போது, ஹஜ் செய்பவர்கள் எவ்வாறு தன்னுடைய முடிகளையும் நகங்களையும் அகற்ற மாட்டார்களோ அவர்களைப் போன்று உள்ஹிய்யா கொடுக்கக்கூடியவர்களும் இருக்க வேண்டும் என்பதை அதன் ஹிக்மத்தாக கூறியுள்ளார்கள்.
இதன் உண்மையை அல்லாஹ்வே நன்கறிந்தவனாக இருக்கின்றான்.

## இந்த சிறப்புமிக்க பத்து நாட்களில் செய்ய வேண்டிய அமல்கள்:

அரஃபாவுடைய தினத்தில் நோன்பு நோற்பது முக்கியமான அம்சமாகும். அதற்கு முன்பு வரக்கூடிய எட்டு நாட்களிலும் நோன்பு வைக்கலாம்.
ஸஹீஹ் அல்-புகாரியில் வரக்கூடிய ஆயிஷா ரளியல்லாஹு அன்ஹா அறிவிக்கக்கூடிய ஹதீஸில் ரஸூலுல்லாஹி ﷺ நோன்பு நோற்கவில்லை என்று வந்திருந்தாலும் ரஸூலுல்லாஹி ﷺ எந்த ஹதீஸிலும் நோன்பு வைக்கக் கூடாது என்று தடுக்கவில்லை.
எனவே இந்த நாட்களில் நோன்பு வைப்பதும் விரும்பத்தக்க செயலாகும்.

மேலும் இந்த நாட்களில் எல்லா விதமான நற்செயல்களையும் செய்துகொள்ளவேண்டும்.
குறிப்பாக கட்டாயக் கடமையான தொழுகைகளிலும், மற்ற கடமையான இபாதத்களிலும் கூடுதல் ஆர்வமாக இருப்பது; நஃபிலான தொழுகைகளில் ஈடுபடுவது; தானதர்மங்கள் வழங்குவது; நோன்பு வைப்பது; பத்தாவது நாள் தொடங்கி பதிமூன்றாவது நாள் வரை உள்ஹிய்யா கொடுப்பது; அதிகமான திக்ருகள் செய்வது; பெருநாள் தினங்களாக இருக்கக்கூடிய அய்யாமுல் தஷ்ரீக் நாட்களில் சந்தோஷமாக இருப்பது; அத்துடன் மற்ற நற்கருமங்களையும் செய்து கொள்ள வேண்டும்.

ஆகவே துல்ஹஜ் மாதத்தின் முதல் பத்து நாட்களுடைய மகத்துவத்தை உணர்ந்து சந்தர்ப்பத்தை உபயோகித்துக் கொள்ள வேண்டும்.

எல்லா புகழும் அல்லாஹ்விற்கே உரித்தாகட்டும். அவனது ஸலாமும் ஸலவாத்தும் ரஸூலுல்லாஹி ﷺ மீதும்; அவர்களது குடும்பத்தினர் மீதும்; அவர்களது தோழர்கள் மீதும் உண்டாகட்டும்.